**தலைப்பு 135 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 135 – பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 12 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேனுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 12,588.85 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 11,821.17 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 767.68 மில்லியன் அதாவது 6.10 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 9,465.50 | 9,403.84 | 61.66 | 0.65 |
| மூலதனம் | 3,123.35 | 2,417.33 | 706.02 | 22.60 |
| மொத்தம் | 12,588.85 | 11,821.17 | 767.68 | 6.10 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2015 ஆம் ஆண்டிற்காக 20-02-01-04 ஆம் வருமானக் குறியீட்டிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,000.00 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 645.46 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 64.55 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | பற்றாக்குறை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 20-02-01-04 | 1,000.00 | 645.46 | 355.54 | 35.45 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 13501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 15.00 | 20.55 | 0.60 | 19.37 | 50.00 | 25.01 |

03 அமைச்சுக்கள் ஒன்றிணையும் போது கடன் மீதிகளை கையளிக்கும் தவறினால் 8493/0/0/135011 இன் கீழ் ரூபா 8,563,593 தொகை ஆண்டின் வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தலின் கீழ் குறிப்பிடப்பட்டமையால் உள்ளபடியான செலவினம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த தவறுகளை சரிசெய்து உள்ளபடியான செலவினங்களைச் சீராக்கியதன் பின்னர் எல்லை விஞ்சாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0331/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 0.1 மில்லியன் ஆக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.23 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0015/0047/000 | 0.27 |
| 6000/0000/00/0019/0016/000 | 0.90 |
| 6000/0000/00/0015/0200/000 | 0.02 |
| 6000/0000/00/0018/0067/000 | 0.89 |
| 6000/0000/00/0002/0/08/000 | 0.15 |
| மொத்தம் | 2.23 |

**2.6 கணக்காய்வு அவதானிப்பு**

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விடுமுறைப் பதிவேடு | தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.2 கட்டுநிதிக் கணக்குகள்

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பணிகள் நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 11 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்ட ரூபா 112,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி பணிகள் நிறைவடைந்து 01 மாதம் முதல் 03 மாதங்கள் வரையான காலம் தாமதித்து கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

### 3.3 வருமானக் கணக்குகள்

அமைச்சின் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.02.01.04 ஆம் வருமானக் குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீடுகளை தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 1,000.00 மில்லியன் வருமானமொன்றை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 645 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 65 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 439,756,841 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 148,969,546 தொகை அதாவது மொத்த நிலுவை வருமானத்தில் 33.8 சதவீதத்தை அறவிடுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 126,114,550 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானத்தை விட மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 88 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது.

(ஈ) 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்கத்திற்குரிய வியாபார அலகுகளை அரசாங்க கம்பனியாக நியமிக்கும் அதிகாரச்சட்டத்தின் கீழ் 23 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் தாபிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரிய 571 தோட்டங்கள் 53 வருட காலத்திற்காக பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தன. வாடகையை கணிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட வாய்பாடுகளின் பிரகாரம் கம்பனிகளின் தேறிய சொத்துக்களின் அளவு ரூபா 200 மில்லியன்

குறைவடைந்தமையால் அகரபத்தன, உடுபுஸல்லாவ மற்றும் எல்கடுவ ஆகிய 03 கம்பனிகளுக்குரிய 45 தோட்டங்களுக்காக 1992 ஆம் ஆண்டு முதல் வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. ''வாடகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை திருத்தங்களின் பின்னர் வாடகைத் திருத்தம் செய்ய முடியுமாக இருந்ததுடன் வாடகை உடன்படிக்கைகளில் அவ்வாறான திருத்தங்களை உரிய கம்பனியின் இணக்கப்பாட்டுடன் திருத்த முடியும் என'' அதற்கான காரணங்களாக அமைச்சு குறிப்பிட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக சகல பெருந்தோட்டக் கம்பனிகளுடனும் கையொப்பமிடப்பட்டிருந்த வாடகை உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக அமைச்சினாலும் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அக் கம்பனிகளிலிருந்து வாடகை அறவிடுவதற்குள்ள இயலுமை தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்ளாமையினால் அரசாங்கத்திற்கு அறவிடக்கூடியதாக இருந்த வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய 249,892 ஹெக்டேயர் அளவான 535 தோட்டங்கள் காணப்பட்டன. கையளிக்கப்பட்ட காணிகளின் சரியான காணி அளவை இனங்காண்பதற்கு எல்லையை தீர்மானிப்பதற்குரிய சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கைத்தொழில் மயம், நீர் வசதிகளை வழங்கல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற பொதுச் செயற்பாடுகளுக்காக 22 வீடமைப்புத் திட்டங்கள், 10 பாடசாலைகள், 7 தோட்ட வைத்தியசாலைகள், 45 சமய நிலையங்கள், 25 மயான பூமிகள், விளையாட்டு மைதானம் மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்காக காணி வழங்கப்பட்டிருந்தது. அதற்காக வழங்கப்பட்ட ஹெக்டேயர் அளவு தொடர்பான குறித்த தகவல்கள் பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவில் முறையானதாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி அரசாங்கத்தின் காணிகளின் சரியான உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2006 ஒக்தோபர் 13 ஆந் திகதிய அரசாங்கத்தின் காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் பேரிலான அமைச்சரவை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு முதல் 03 வருட காலத்தில் சகல காணிகளையும் அளந்து நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டு, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் அளப்பதற்குரிய கொடுப்பனவுகளுக்குரியதாகக் காணப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக அந் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தாக அமைச்சின் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 ஆம் ஆண்டின் இறுதிவரையில் 23 கம்பனிகளின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற தோட்டங்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கும் அத்துமீறிய 565 குடியிருப்பாளர்களுக்கும் உரிய அனுமதியற்ற காணி பயன்பாடு தொடர்பாக நீதிமன்றத்தில் 117 வழக்குகள் விசாரணையில் காணப்படுவதுடன் பெருந்தோட்டக் கம்பனி உரிய தோட்டங்களை குத்தகைக்கு வழங்கும் போது அதனுடன் அட்டோனி அனுமதிப்பத்திரமொன்று குத்தகையாளரினால் (இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்/ மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை) குத்தகைக்குப் பெற்ற தோட்டக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அட்டோர்னி அனுமதிப்பத்திரத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குத்தகை கொடுப்பனவுத் தரப்பினரின் உரித்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அந்தந்த நீதிமன்றங்களில் சமூகமளிக்கும் அதிகாரமும் குத்தகையாளர் தரப்பிற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள காணி தொடர்பான வழக்கு நடவடிக்கைகளின் போது அரசாங்கம் அக்கரை செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) பெருந்தோட்டக் கம்பனியுடன் 1995 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட திருத்தத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

13501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 99,212 கடன் பணம் 21 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) வேலை நீக்கஞ் செய்யப்பட்ட மற்றும் சேவை முடிவுறுத்தப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 534,928 கூட்டுத்தொகை 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 183,952 கூட்டுத்தொகை 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 9,550,000 கூட்டுப்பெறுமதியான மூன்று மோட்டார் வாகனங்கள் 01 மாதம் முதல் 03 வருடங்கள் வரையிலான காலமாக விளைவற்று அல்லது குறைப் பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை கணக்காய்வின் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 04 மாதங்கள் அளவிலான தாமதத்தின் பின்னர் 2016 யூலை 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.6 செயலாற்றல்

வெலிகம தென்னையோலை வெளிறல் மற்றும் அழுகுதல் நோயினை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2012 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வெலிகம தென்னையோலை வெளிறல் மற்றும் அழுகுதல் நோய் காணப்பட்ட பிரதேசத்திற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1.11 மில்லியன் செலவில் காணி உரிமையாளர்களுக்கிடையே குந்திரா தென்னங்கன்றுகள்

பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தேங்காய்களின் தேய்காய்ச்சொட்டு குறைவடைந்தமையால் அறிமுகப்படுத்தப்பட்டமை வெற்றியளித்திருக்கவில்லை.

(ஆ) களப்பரிசோதனைத் தொகுதியொன்றைப் பராமரிப்பதற்காக காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 33.70 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெமுஹுன் தென்னங்கன்றுகளுடன் YMP மற்றும் டொலமைட் உரம் 01 கிலோகிராம் வீதம் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 1.58 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அப்பசளையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 100 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 51 மில்லியன் மாத்திரமான குறைந்த அளவே பயன்படுத்தப்பட்டிருந்தது. நோய் எதிர்ப்பு தென்னங் கன்றுகளை நடுவதற்காக தேவையான காணியினைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால் அதற்காகக் காணப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் பரவிய நோய் மரங்களின் அளவு குறைவடைந்தமையின் காரணமாக நட்டஈடு செலுத்தும் அளவு குறைவடைந்தமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக அமைச்சினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) இந்த செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2015 அம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 394 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அந்த நோய்க்காக நிரந்தர தடுப்பு முறையை கண்டறிய முடியாதிருந்தது.

## 3.7 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சிற்குச் சொந்தமான 15 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூப 7.84 மில்லியன் தொகையான நட்டங்கள் இழப்புக்களையும் மேலும் வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அந்த நட்ட இழப்பினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது களஞ்சியத்தில் பொருட்கள் காணாமல் போனமையால் ஏற்பட்ட ரூபா 232,500 மற்றும் ரூபா 188,900 பெறுமதியான கணனி காணாமல் போனமையால் ஏற்பட்ட நட்டம் என்பவற்றை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2015 பெப்ரவரி மாதத்தின் போது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரின் உத்தியோகபூர்வ அறைக்கு காபட் இடுவதற்கும் திரைச்சேலை இடுவதற்குமாக ரூபா 500,055 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டில் புதிய அமைச்சர் நியமிக்கப்பட்டதன் பின்னர் 2015 நவம்பர் மாதத்திற்கு முன்னர்

காணப்பட்ட திரைச் சேலையும் காபட்டும் அகற்றப்பட்டு மீண்டும் ரூபா 507,620 செலவில் புதிதாக திரைச்சேலையும் காபட்டும் இடப்பட்டிருந்தன.

(ஆ) 16712 சதுர அடி அளவொன்று மாதாந்தம் ரூபா 824,567 வாடகை செலுத்தும் அடிப்படையில் அமைச்சு 2015 சனவரி மாதம் வரை ஜனவசம கட்டிடத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி மாதம் முதல் 31,504 சதுர அடி அளவில் மாதாந்த வாடகை ரூபா 6,830,631 செலுத்தி செத்சிறிபாய II ஆம் கட்ட கட்டிடத்தில் இந்த அமைச்சு தாபிக்கப்பட்டிருந்தது.

### 3.9 முகாமைத்துவ நலிவுகள்

2014 செப்தெம்பர் 28 ஆந் திகதி விபத்தொன்றினால் வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 3.81 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த வாகனத்தின் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு இறுதி பரிசோதனை அறிக்கை 03 வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி உள்ளகக் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வறிக்கை 2015 திசெம்பர் 31 வரையிலும் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 24 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 580 | 541 | 39 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 65 | 71 | - | 06 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 01 | 03 | - |
| | மொத்தம் | 682 | 640 | 48 | 06 |